**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No. 2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for Prosecution அ.சா. 7
Defence
Court

Name : அலெக்சாண்டர்

Father's/Husband Name : மோசஸ்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 31st August 2021.

முதல் விசாரணை:

நான் தற்போது தென்காசி அருகில் மேலகரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் பைனான்சியிராக தொழில் செய்து வருகிறேன். இறந்து போன சுரேஷ், சேகர், செந்தில் என்ற செந்தில்குமார் ஆகியோரை தெரியாது. ஆஜர் எதிரிகளை தெரியாது. சம்பவத்தை பற்றி எதுவும் தெரியாது.

இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது:-

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

கடந்த 14.8.2007 அன்று காலை நானும் எனது நண்பர்கள் சுரேஷ், கேபிள் முத்து, சேகர், பிரபு தட்சிணாமூர்த்தி ஆகியோர்களும் கூளக்கடை பஜார் LRS பாளையம் ஜங்சனில் நின்றுகொண்டிருந்தோம் என்றும், காலை சுமார் 10.15 மணிக்கு தென்காசி மகளிர் காவல் நிலையத்தில் கையெழுத்து போட்டு விட்டு ஹனிபாவும், அவருடைய கூட்டாளிகளும் TN76 B 9529, TN76B 4974 என்ற ஆட்டோக்களில் கிழக்கு பார்த்து வேகமாக சென்றார்கள் என்றும் அவர்களுக்கு முன்னால் அலாவூதீன் TN72 X 0558 என்ற மோட்டார் சைக்கிளில் வேகமாக போனார்கள் என்றும், மேலமுத்தாரம்மன் கோவில் பக்கம் போன போது அலாவூதீன் எதிரே சக்தி பாண்டியன் ஓட்டி வந்த TN 72 Z 9757 அம்பாசிட்டர் காரின் மீது மோதி வழி மறித்து நிறுத்தினார்கள் என்றும், அதனால் சக்திபாண்டியனும் அவர்கள் கூடவந்தவர்களும் காரை விட்டு இறங்கி கிழக்கு பார்த்து ஓடினார்கள் என்றும், அங்கே சிலர் மறித்ததால் மீண்டும் மேற்கு பார்த்து ஓடி வந்தார்கள் என்றும், அவர்களை ஹனிபா, அப்துல்லா மற்றும் அவர்களது கூட்டாளிகள் நாகூர்மீரான், மீரான் மைதீன், அசன்கனி, நவாஸ்,சையது அலி மேலும் சிலரும் ஆயுதங்களுடன் விரட்டி குத்தி தாக்கினார்கள் என்றும், பதிலுக்கு செந்தில், சுரேஷ், சேகர், மற்றும் அவர்களது நண்பர்களும் பதிலுக்கு தாக்கினார்கள் என்றும், செந்திலை ஹனிபா அருவாளால் தலையில் மாறிமாறி வெட்டியும், அப்துல்லா, அருவாளால் சேகரின் வலது முழங்கை, இடது முழங்கை, இடது விலா ஆகிய இடங்களில் வெட்டியும் அசன்கனி கத்தியால் சேகர் வலது கக்கத்திற்கு கீழ் குத்தியும், ராஜாமுகமது அருவாளால் சேகரின் வலது காதுக்கு கீழும், வலது உள்ளங்கையிலும், வெட்டினார் என்றும், செந்திலை அலாவூதீன் அருவாளால் தலையில் இடது காதோடு சேர்த்து வலது கண் புருவத்திற்கு மேலும் வெட்டினார் என்றும், சுரேசை சையது அலி பட்டாக்கத்தியால் முகத்தோடு சேர்த்து தலையில் வெட்டினார் என்றும், இந்த தாக்குதலில் சேகர், சுரேஷ், செந்தில், அசன்கனி, பஷீர், நாகூர் மீரான் ஆகியோர்களும் இறந்துவிட்டார்கள் என்று கேள்விபட்டேன் என்று போலீஸ் விசாரணையில் கூறினேன் என்றாலும், மேற்படி விவரங்கள் அனைத்தையும் நடந்த

சம்பவங்களை பற்றியும் போலீசார் விசாரைணயில் வாக்குமூலமாக சொல்லிவிட்டு தற்போது நானும் எதிரிகளும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் நாங்கள் சமாதானமாக போய்விட்டோம் என்பதால் அதன் அடிப்படையில் நடந்த சம்பவத்தை மறைத்து உண்மைக்கு மாறாக அரசு தரப்புக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**<u>அனைத்து எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை</u>**